| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து அரசுத் தேர்வுகள்<br>உதவி இயக்குநர்கள் |

**ந.க.எண். 025196/ எச்1 /2022** **நாள்.13.12.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–06 – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – மார்ச்/ஏப்ரல்–2023 பள்ளி மாணாக்கர்கள்– மாற்றுத்திறன் கொண்ட தேர்வர்கள் – சலுகைகள் கோரும் தேர்வர்கள் பட்டியல் – சரிபார்த்து தொகுத்து பரிந்துரைப்பட்டியலை அனுப்பக் கோருதல் – சார்பு.

**பார்வை**

1. அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக் கல்வி(வி1) துறை, நாள்.10.02.2010.
2. அரசாணை (நிலை) எண்.2, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.07.01.2012.
3. அரசாணை (நிலை) எண்.268, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.19.10.2012.
4. அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வி (அ.தே.)த் துறை, நாள்.25.03.2022.
5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 13.12.2022

*****

பார்வை 5–ல் கண்டுள்ள கடிதத்தில், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும், நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் – 2023 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு, பள்ளிகளில் பயிலும் சலுகை வழங்கக் கோரும் மாற்றுத் திறனாளி மாணவர்களது விண்ணப்பங்களை, உரிய சான்றுகளுடன் **06.01.2023** அன்று சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பேரில், தங்களது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திலிருந்து, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுத சலுகை கோரும் பள்ளித் தேர்வர்களது விண்ணப்பங்களுடன் பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ்கள் மற்றும் இணைப்புகளை நன்கு ஆய்வு செய்து, சலுகை கோரிய தேர்வர்கள் அனைவரும் பார்வை 1 முதல் 4 வரையுள்ள அரசாணையின்படி, சலுகைகள் பெற தகுதியுடையவரா என்பதை உறுதி செய்திட வேண்டும். தகுதியற்ற மற்றும் அரசாணையில் குறிப்பிடப்படாத மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு தேர்வெழுத

சலுகைகள் வழங்குமாறு அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் பரிந்துரை செய்தல் கூடாது.

அதன்பின், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுத சலுகை கோரும் தகுதியுள்ள பள்ளித் தேர்வர்களின் விவரங்களை இணைப்பிலுள்ள மாதிரிப் படிவத்தின் படி **(Excel-ல், UNICODE (TAU-MARUTHAM) Font-ல்)** தயாரித்து, ‘‘மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள சலுகை கோரும் மாற்றுத்திறனாளித் தேர்வர்களது விண்ணப்பங்களையும், அவற்றுடன் இணைக்கப்பட்ட தகுதிச் சான்றுகளையும் நன்கு ஆய்வு செய்த பின்னரே இயக்குநரிடம் பரிந்துரைக்காக அனுப்பப்படுகிறது’’ என்ற சான்றொப்பமிட்டு, அப்பட்டியலை **(உரிய மருத்துவச் சான்று நகல் இணைப்புகளுடன்),** வருகிற **18.01.2023**–க்குள் அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் (மேல்நிலை) அவர்களுக்கு அனுப்ப வேண்டும். மேலும், **அப்பட்டியலின் soft copy ஒன்றினை** dgeh1sec@gmail.com என்கின்ற இணையதள முகவரிக்கும் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு :**

1. மாதிரிப்படிவம்.
2. பார்வையில் காணும் அரசாணைகளின் நகல்கள்
3. மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகை விவரங்கள் அடங்கிய பட்டியல்

ஒம்/–
இயக்குநர்

**நகல்:**
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.